சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை–08.

ந.க.எண்.009817/அ3/2023, நாள். 06.03.2024.

பொருள் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர்க கழகம், சென்னை– 06. – 2023–2024 ஆம் ஆண்டில் அனுப்பியுள்ள வினாவங்கி புத்தகங்கள் அனைத்து பள்ளிகளும் வாங்கி பயன்பெற அறிவுறுத்தக் கோருதல் – சார்பு.

பார்வை 1 தலைவர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் குறிப்பாணை ஒப்புதல் நாள்.10.07.2023.

2 சென்னை – 06, தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலரின் கடிதம் ந.க.எண்.348,/அ/2023, நாள். 19.02.2024

…………………

பார்வை 2 – ல் காணும் சென்னை – 06. தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலரின் கடிதத்தில், 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான 10 ஆம் வகுப்பு மாதிரி வினாத்தாள் தொகுப்பு, கணித தீர்வுப் புத்தகங்கள், 12 ஆம் வகுப்பு மாதிரி வினாத்தாள் தொகுப்பு புத்தகங்களின், கணித COME புத்தகம், கணிதம் மற்றும் இயற்பியல் தீர்வு புத்தகங்களை (தமிழ் மற்றும் ஆங்கில வழி) தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்கு பார்வை 1 – ல் காணும் தலைவர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கப்பட்டு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட விற்பனை மையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு 20.12.2023 முதல் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் 24.01.2024 – ல் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு பின்வருமாறு முடிவு செய்யப்பட்டது.

பெற்றோர் ஆசிரியர் கழகப் புத்தகங்களின் விலை அதிகமாக உள்ளதாபக கருகின்றார்கள். எனவே, பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை 500 க்கு குறைவாக இருப்பின் 3 செட் புத்தகங்களும், 500 க்கு அதிகமாக இருப்பின் 5 செட் புத்தகங்களும் அந்தந்த பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து பெற்று மாணவர்களின் வழிகாட்டுதலுக்கு பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்து சுற்றறிக்கை அனுப்பலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

தாமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் 2023– 2024 ஆம் ஆண்டு புதிய வெளியீடான 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாதிரி வினாத்தாள் மற்றும் தீர்வுப் புத்தகங்களின் வெளியிடப்பட்டுள்ள விவரம் பல பள்ளிகளுக்கு சரியாக சென்று சேரவில்லை என அறிய வருகிறது. எனவே, 24.01.2021 – ல் நடைபெற்ற செயற்குழு தீர்மானத்தின்படி, 500 மாணவர்களுக்கு குறைவாக உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மறுறும் 12 ஆம் வகுப்பு வினா வங்கி புத்தகங்கள் 3 செட் விதமும், 500 மாணவர்களுக்குஅதிகமாக உள்ள பள்ளிகளில் 5 செட் புத்தகங்கள் வாங்கி மாணவர்கள் பயன் பெறவும், இதற்குறிய செலவினத் தொகையை அந்தந்த பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் வாங்கி பயன்பெ அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்விஅலுவலர்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் 500 மாணவர்களுக்கு குறைவாக உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மறுறும் 12 ஆம் வகுப்பு வினா வங்கி புத்தகங்கள் 3 செட் விதமும், 500 மாணவர்களுக்குஅதிகமாக உள்ள பள்ளிகளில் 5 செட் புத்தகங்கள் வாங்கி மாணவர்கள் பயன் பெறவும், இதற்குறிய செலவினத் தொகையை அந்தந்த பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து மேற்கொள்ள அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08.

06/03/24

பெறுநர்

அனைத்து அரசு / அரசு உதவி பெறும்
உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
சென்னை மாவட்டம்.

நகல்

சென்னை – 06, தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.